நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்



# இந்துத்துவ அமைப்புகளின் அரசியல் தமிழகத்தில் எடுபடாது

## தொல். திருமாவளவன்

**மதுரை/திருப்பரங்குன்றம், ஜூன் 19:** இந்துத்துவ அமைப்புகளின் வட மாநில அரசியல் தமிழகத்தில் எந்தக் காலத்திலும் எடுபடாது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு சார்பில், மதுரையில் வியாழக்கிழமை நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் நிறைவில் அவர் மேலும் பேசியதாவது:

வட மாநிலங்களில் மதத்தின் பெயரால் மக்களை பிளவுபடுத்துவதற்கு கையாண்ட உத்திகளை இந்துத்துவ அமைப்பினர் தமிழகத்தில் தற்போது சோதித்துப் பார்க்கின்றனர். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபடுகின்றனர். பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளில் இருந்தே திருப்பரங்குன்றம் மலை பிரச்னையை இந்துத்துவ அமைப்பினர் கையிலெடுத்து, கூர்மைப்படுத்தி வருகின்றனர். ஆனால், இங்கு இந்து, இஸ்லாம் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ்வதால் அவர்களின் முயற்சிகளுக்குப் பலன் கிடைப்பதில்லை.



மதுரையில் மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் நிறைவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன். உடன், திரைப்பட இயக்குநர் அமீர் உள்ளிட்டோர்.

முக்குலத்தோர் சமூகத்தை தங்கள் பக்கம் ஈர்க்க வேண்டும் என்பதற்காகவே மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. ஆனால், அவர்களின் இலக்கு இங்கு வெற்றி பெறாது. தமிழர்களை மதத்தின் பெயரால் பிளவுபடுத்தும் முயற்சிகளை இந்துத்துவ அமைப்புகள் கைவிட வேண்டும்.

மதுரை முருக பக்தர்கள் மாநாடு கலவர உத்திக்கான மாநாடு என்பதை தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இங்கு, வன்முறைக்கு ஒருபோதும் இடம் கிடையாது. அம்பேத்கர், பெரியார் எந்த நோக்கத்துக்காக கைகோர்த்தார்களோ அதே நோக்கத்துக்காக கைகோர்த்துள்ளோம். சமூகப் பண்பாட்டு தளத்தில் மட்டுமல்லாமல், அரசியல் களத்திலும் சநாதன சக்திகளை தமிழர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றார் அவர்.

முன்னதாக நடைபெற்ற மனிதச் சங்கிலியில், மதுரை ராஜா முத்தைய மன்றம் பகுதியிலிருந்து உலகத் தமிழ்ச் சங்கம் வரை திரளானோர் கைகோர்த்து நின்றனர். திரைப்பட இயக்குநர் அமீர், அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழக பொதுச் செயலர் பசும்பொன் பாண்டியன், மதுரை மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஹென்றி திபேன், வாஞ்சிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தீர்மானம்...** மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் நிறைவில், தமிழர் மரபை உயர்த்திப் பிடிப்போம், சாதி, மதம் என்ற குறுகிய அரசியலைக் கடந்து சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயத்தை முன்னிறுத்தி மதுரையின் தொன்மை பண்பாட்டை பாதுகாப்போம். மதுரையில் இந்து முன்னணி நடத்தும் முருக பக்தர்கள் மாநாட்டைப் புறக்கணிப்போம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தமிழகத்தில் மதத்தின் பெயரால் வன்முறைக்கு வித்திடக் கூடாது:** தமிழகத்தில் மதத்தின் பெயரால் வன்முறைக்கு வித்திடக் கூடாது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வியாழக்கிழமை திருமாவளவன் சுவாமி தரிசனம் செய்தார். இதைத் தொடர்ந்து அவர், பெரிய ரத வீதியில் உள்ள தர்காவுக்குச் சென்று அங்குள்ள இஸ்லாமியர்களைச் சந்தித்தார். இதையடுத்து, திருப்பரங்குன்றத்தில் உள்ள சுட்டு கோல் மாயாண்டி சுவாமி கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்குச் சென்று முருகனை தரிசித்துவிட்டு, மலை உச்சியில் இருக்கிற தர்காவுக்கு செல்லலாம் என வந்தோம். நெடுந்தொலைவு என்பதால் பிற்பகலில் மலை ஏற முடியாத சூழலில், அடிவாரத்திலேயே இரு தரப்பு பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினேன். அவர்களிடம் சமூக நல்லிணக்கம் குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தேன்.

இதற்கு, அவர்கள் தங்களுக்குள் எந்த பிரச்னையும் இல்லை எனத் தெரிவித்தனர். எனவே, இந்த பிரச்னையை மதவாத சக்திகள் பெரிதாக்கக் கூடாது. தமிழகத்தில் மதத்தின் அடிப்படையில் வன்முறைக்கு வித்திடக் கூடாது என்றார் அவர்.